# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 Nov 2017 Issue - 11


ஆசிரியர் உரை

## என்ன செய்வதென்று தெரியாதபோது...

இப்பாமுலகில் மானிடராய்ப் பிறந்து வாழும் எல்லோருக்கும் ஏதாவது ஒருவகையில் ஒற்றுமை இருக்கிறதென்றால், அது அவர்கள் எதிர்கொள்ளும் பாடுகளிலும், சவால்களிலும் தான் என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லிவிடலாம். ஏனெனில், மானிடம் மேற்கொள்ளும் வாழ்க்கைப் பயணத்தின் நேரங்களும், நாட்களும், காலங்களும் அவன் விரும்புவது போலும், திட்டமிடுவது போலும் லேசாகக் கடந்து போய் விடுவதில்லை. நரர் படும் இப்பாடுகளுக்கு விதிவிலக்கும் என்பதும் இல்லையென்று, சர்வவல்ல தேவனால் மிஞ்சின ஞானமுள்ளவனாய் ஆக்கப்பட்ட சாலமோன் ராஜா கோடிட்டுக் காட்டுகிறார். எப்படியெனில், வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்குத் தன் மனதைப் பிரயோகம் செய்துவிட்டு ( பிர. 1:13 ) இப்படியாகக் குமுறுகிறார். எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடுகிறவனுக்கும் ஆணையிடப் பயப்படுகிறவனுக்கும் சமமாய்ச் சம்பவிக்கும். எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது சூரியனுக்குக் கீழே நடக்கிறதெல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம் (பிரசங்கி 9:2,3) என்று.

இப்படி நல்லவர்களாயிருந்தாலும், தீயவர்களாயிருந்தாலும் பக்தியுள்ளவர்களாயிருந்தாலும், பக்தியில் குறைபாடுள்ளவர்களாக இருந்தாலும், எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும் காரியங்கள் நமக்கும் வந்து என்ன செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து, கண்கலங்கி நிற்கும்போது, தேவனுக்குப் பயந்து வாழ்பவர்களின் அணுகுமுறை, முற்றிலும் மாறுபட்டதாய் தேவமனிதர்களின் முன்னுதாரணத்தை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்க வேண்டும். ஆம், எச்சூழலிலும் தேவனுக்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தேவனை இரண்டாம், மூன்றாம் இடத்திற்கும், கடைசி வாய்ப்புக்கும் தள்ளிவிடக் கூடாது. தேவன் இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இப்பேருண்மையை நம்முடைய வாழ்வில் புரிந்து ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாக ஒரு பழைய ஏற்பாட்டுச் சம்பவத்தை இம்மாதத்திற்காகத் தெரிந்திருக்கிறேன் II ராஜா 4:1-7 வசனப்பகுதியில் இதுபற்றிய விபரங்கள் நமக்கு ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகச் செல்லுவதற்கு முன், நமது ஆசானின் ஆச்சாரப்படி இதன் பின்னணிக் காரியங்களை நாம் கவனித்து விடுவோம்.

அந்நாட்கள் தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்டகாலம். வடக்கு ராஜ்ஜியத்தில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தவர்களில் எலியாவும், எலிசாவும் பிரபலமானவர்கள் . எலியா மகாதீர்க்கன் ஒட்டுமொத்தத் தீர்க்கதரிசிகளின் பிரதிநிதியாக வேதாகமத்தால் அங்கீகரிக்கப்பட்டவன். ஆம், மறுரூபமலையில் இயேசு ஆண்டவரோடு காட்சி தந்த இருவரில் இவன் ஒருவன். மற்றவன் பிரமாணங்களின் தந்தை மோசே (மத். 17 - ம் அதி). இந்த எலியா ஒரு கட்டத்தில் சுழல் காற்றினால் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அக்கண்கொள்ளாக் காட்சியை நேரில் கண்டு, அதன் மூலம் இரட்டிப்பான ஆவியின் வரத்தைப் பெற்று (II ராஜா. 2) தன் தீர்க்கதரிசன ஊழியத்தைப் பெலத்தோடே ஆரம் பித்தவன் தான் இந்த தீர்க்கன் எலிசா.

எப்படி மோசே தாசனின் தலைமைப் பண்பைக் காட்டிலும் யோசுவாவின் வழிநடத்துதல் நன்றாக இருந்தது என்று சொல்ல முடியுமோ அதுபோல, எலியாவின் தீர்க்கதரிசன ஊழியத்தைக் காட்டிலும் எலிசாவின் செயல்பாடு சிறப்பாக இருந்தது என்று கூறமுடியும். இங்கே மோசே, எலியா போன்றவர்களைக் காட்டிலும் யோசுவாவும், எலிசாவும் மேலானவர்கள் என்று நான் கூறவில்லை. மாறாக, அம்மாபெரும் மனிதர்களுக்குப் பிறகு நடந்த காரியங்களை ஒருவகையில் ஒப்பீடு செய்கிறேன், அவ்வளவே! இவ்வகையில் எலியாவைக் காட்டிலும் அதிகமான அற்புதங்களை நடப்பிக்கும்படி பரலோகத்தின் தேவன் எலிசாவைப் பயன்படுத்தியிருக்கிறார்.

இந்த எலிசாவுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. ஆம், இவன்தான் உலகத்திலேயே வைத்து முதல் வேதாகமப்பள்ளி முதல்வர் அல்லது இயக்குநர். ஆம் தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவன் முன்பாக அமர்ந்து, தேவ காரியங்களைக் கற்றிருக்கிறார்கள் (II ராஜா. 4:38). நாம் இம்மாதம் கவனிக்க இருக்கும் சம்பவம் இந்த எலிசாவின் நாட்களில் தான் நடந்துள்ளது. பக்தி வாழ்வில் நாம் எப்படிப்பட்ட பக்குவத்தோடு நடத்துகொள்ள வேண்டுமென்பதற்கு இச்சம்பவம் ஒரு சரியான எடுத்துக்காட்டு.

ஆம், தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து உமது அடியாளாகிய என் புருஷன் இறந்து போனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள் (II ராஜா 4:1). இப்படி அந்தக் கைம்பெண் தன் பிரச்சினையைத் தேவமனிதனிடத்தில் கொண்டு வந்தாள். எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள் ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை ( 4:2 ) என்று கூறி, தன்னிடத்தில் இருப்பதைத் தெரிவித்தாள்.

அப்பொழுது அவன் : நீ போய் உன்னுடைய அயல் வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி உள்ளே போய் உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான் ( 4:3,4 ). இப்படி அவளுடைய பிரச்சினை நீங்கும்படி செய்ய வேண்டியது இன்னதென்று சொல்லியனுப்பினான்.

இதைக் கேட்டுக் கொண்ட அவள், பதில் எதுவும் பேசாமல் ...அவனிடத்திலிருந்து போய்,தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக் கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க அவள் அவைகளில் வார்த்தாள். அந்தப் பாத்திரங்கள் நிறைந்த பின், அவள் தன் மகன் ஒருவனை நோக்கி இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா என்றாள். அதற்கு அவன்: வேறே பாத்திரம் இல்லை என்றான்; அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று (II ராஜா. 4:5,6).

இப்படிச் சொன்னபடி செய்துவிட்டு, அவள் போய் தேவனுடைய மனிதனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன் நீ போய் அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்து மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான் (4:7).

இச்சம்பவம் பற்றி வேதத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வெளிப்பாடு இவ்வளவு தான். இது ஒரு கதையோ அல்லது கற்பனையோ அல்ல. பழைய ஏற்பாட்டு ராஜாக்களின் நாட்களில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம். தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர் 15:4) என்று பவுலடியார் ரோமையருக்குக் கூறியிருக்கிறபடியால், இச்சம்பவம் நமக்குக் கொடுக்ககூடிய பக்திப்போதனைகள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

**I எச்சூழலிலும் தேவக்காரியத்தில் முறுமுறுப்பு கூடாது**

தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த அந்தக் கைம்பெண் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், எந்தச் சூழலிலும் முறுமுறுப்பு கூடாது என்பது.

முறுமுறுப்பு என்பது ஒரு காரியத்தில் அல்லது சூழ்நிலையில் கோபத்துடன் கூடிய அதிருப்தியை வெளிப்படுத்துவது. பொதுவாகவே இது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. அதுவும் தேவனுக்கடுத்த வாழ்வில் முறுமுறுப்பை தேவன் சுத்தமாக அனுமதிப்பதில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுப்பின் மொத்த உருவமாகவே அநேக கட்டங்களில் காட்சி தந்தார்கள். தேவன் அவர்களை வனாந்திரத்தில் அற்புதமாக வழிநடத்திக்கொண்டு வருகையில் தண்ணீரினிமித்தம் முறுமுறுத்தார்கள் (யாத்.16 :2,3). அப்புறம், கானானை வேவுபார்க்கச் சென்று வந்த பத்துப்பேர் கானானைக் குறித்து துர்ச்செய்தி பரப்பினபோது பயந்து முறுமுறுத்தார்கள் (எண்.14:1-4). இப்படிப்பட்ட முறுமுறுப்புகளைத் தேவன் ஒருபோதும் சகிப்பதில்லை. இந்த முறுமுறுப்பின் விலை பயங்கரம் என்பதை ஆவியானவர் பவுலடியாரைக் கொண்டு கொரிந்தியருக்கு இப்படியாக நினைவுபடுத்தினார். அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள் என்று (1 : கொரி. 10:10).

ஆனால், நமக்குப் பாடம் கற்றுக்கொடுக்க தேவன் இம்மாதம் பயன்படுத்தும் இக்கைம்பெண்ணிடம் முறுமுறுப்பு என்பது மருந்துக்குக்கூட இல்லை. இத்தனைக்கும் அவள் முறுமுறுப்பதற்குப் பலமான காரணங்கள் பல இருந்தன. எப்படியெனில், 1. தீர்க்கதரிசன ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்தியிருந்த கணவன் வாழவேண்டிய வயதில் மரித்துப்போனான். 2. கர்த்தருக்குப் பயந்து அவ்வூழியத்தை உண்மையாய்ச் செய்திருந்தும் கடனில் வாழ்ந்து மரித்துள்ளான். 3.அக்கடனினிமித்தம் தனக்கு ஆதரவாக இருக்கும் இரண்டு மகன்களை அடிமைகளாகக் கொடுக்கவேண்டிய அவலமும் வந்து விட்டது. ஒருவனோ அல்லது ஒருத்தியோ பக்தி வாழ்க்கையில் முறுமுறுப்பதற்கு இவை போதுமா போதாதா?

ஆனால், பாருங்கள் இக்கைம்பெண் எவ்வித முறுமுறுப்பும் இல்லாமல் மிஞ்சின பக்திப் பக்குவத்தோடு தன் பிரச்சினையை

தேவமனிதனாகிய எலிசாவினிடத்தில் கொண்டு வந்தாள். பக்திமிகுந்த கணவனைப் பாதியிலேயே பறிகொடுத்துவிட்டேனே என்ற புலம்பல் இல்லை. இப்படிக் கடன்காரியாகி காட்சிப்பொருளாகி நிற்கிறேனே என்ற புலம்பல் இல்லை. தன் பிள்ளைகள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்படும் சூழ்நிலையிலும் அடாத சிந்தை எதுவுமில்லாமல் கர்த்தர்மீதும் அவருடைய வழி நடத்துதல் மீதும் அபார நம்பிக்கை. எவ்வித முறுமுறுப்பும் கிஞ்சித்தும் காணப்படவில்லை. பழம்பெரும் பக்தன் யோபுவுக்கிருந்த தேர்ந்த பக்தி இவளிடம் தென்படுகிறது.

அருமையானவர்களே! பிரச்சினையான நேரங்களில் சவாலான சந்தர்ப்பங்களில் மோசமான நாட்களில் நாம் எப்படிபட்டவர்களாக உள்ளோம்? நம்முடைய பக்திப் பயணத்தின் போக்கு எப்படியுள்ளது? இஸ்ரவேல் ஜனங்களைப் போல முறுமுறுக்கிறவர்களாக உள்ளோமா அல்லது இக்கைம்பெண்ணைப் போல முழுமையாகத் தேவனை நோக்கி முழங்காலிடுகிறவர்களாக உள்ளோமா? முறுமுறுப்புத்தானே பெரும்பாலும் தலைதூக்குகிறது? வேண்டாம் முறுமுறுப்பு. எல்லாக் காரியங்களுக்கும் காரணராயிருக்கிற தேவன் நம் வாழ்க்கையில் எதிர்கொள்பவைகளை ஏன் அனுமதிக்கிறார் என்று நமக்குத் தெரியாது. பிரசங்கி 3:11 – ல் ஞானி சாலமோனைக் கொண்டு, இது சம்பந்தமான ஓர் உன்மையை உணர்த்தியுள்ளார். ஆதிமுதல் அந்தமட்டும் தேவன் செய்துவருகிற கிரியைகளை மனுஷன் கண்டுபிடியான் என்று.

இவ்வுண்மையை நாம் உண்மையாகவே உணர்ந்து கொண்டால், எந்தச் சூழ்நிலை குறித்தும் நாம் முறுமுறுக்கக் கூடாது. மாறாக, எச்சூழலுக்கும் ஏற்ற தீர்வு அவரிடத்தில் உண்டு என்பதை மனதார ஏற்று, அவருடைய சமூகத்தில் அடைக்கலம் தேடி அவருடைய வழிநடத்துதலுக்குக் காத்திருந்து வாழ வேண்டும். செய்வோமா?

### II. **தேவன் செயல்பட நம்மிடத்திலிருப்பது போதும்**

அந்தக் கைம்பெண் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்தபாடம், நம்மிடத்திலிருப்பதைக் கொண்டு தேவன் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்த முடியும் என்பது.

துக்கம் தொண்டையை அடைக்கும்படியான வேளையில் எவ்வித முறுமுறுப்புமில்லாமல் மிகுந்த நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் தேவமனிதனிடத்தில் வந்த இப்பெண்ணிடம் கேட்கப்பட்ட கேள்வி **நான் உனக்கு என்ன செய்யவேண்டும்?** என்பது (II ராஜா. 4:2). இக்கேள்வி, அவளுடைய தேவை என்ன என்று தெரியாமல் கேட்கப்பட்ட ஒரு கேள்வி அல்ல. இதேவிதமான கேள்வியை இரட்சகர் இயேசு பிறவிக் குருடனாகிய பர்திமேயுவிடம் கேட்டுள்ளார். **நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?** (மாற்கு 10:51) இப்படிப்பட்ட கேள்விகள் சம்பந்தப்பட்டவர்களின் தேவை என்ன என்று தெரியாமல் கேட்கப்படும் கேள்வி அல்ல. மாறாக, அவர்களின் மனநிலையை அறிந்து கொள்ளும்படியாகக் கேட்கப்படுபவைகள்.

அடுத்த கேள்வி, வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது? என்பது. இப்படிப்பட்ட கேள்விகளின் நோக்கம் சம்பந்தப்பட்டவர்களின் உள்ளக்கிடக்கையையும், உண்மைத்தன்மையையும் பரிசோதிப்பது. இதேவிதமாகத்தான் இயேசுவும் சூழ்நிலையை அணுகினார். 5 அப்பங்கள் 2 மீன்களை 5000 பேருக்குப் பங்கிட்டு மீதியானதைப் 12 கூடைகளில் நிரப்புவதற்கு முன், பிலிப்புவை நோக்கி இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும் அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார் என்று வசனம் கூறுகிறது (யோவான் 6:5,6).

சரி, எலிசாவின் இரண்டாவது கேள்விக்கான அப்பெண்ணின் பதில், ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்னும் இல்லை என்பது ( 4:2 ). இவள் பதிலில் அடங்கியுள்ள செய்தி உங்களுக்குப் புரிகிறதா? எனக்கிருக்கும் கடனுக்கு இந்த ஒருகுடம் எண்ணெய் எந்தக் கோட்டுக்கு ஆகும்? என்பதே. இதேவிதமான தொனியில் தான் ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்கள் அற்புத சம்பவத்தில் சீடன் அந்திரேயாவின் பேச்சு இருந்தது. இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும், அவைகள் இத்தனை ஜனங்களுக்கும் எம்மாத்திரம் என்று

தேவனுக்கான வாழ்க்கையில் இப்படிப்பட்ட அதிகப்பிரசங்கித்தனமான பேச்சுக்கள் கூடாது. ஒரு சமயம் மோசே தாசனைக் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படி அனுப்பச் சித்தங் கொண்டபோது, அவன் என்னை நம்பார்கள் என் வாக்குக்குச் செவிகொடார்கள் என்றெல்லாம் சொல்லித் தயங்கினான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி உன் கையிலிருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான். இங்கே கவனியுங்கள் மோசே தாசன் கோலைத்தவிர வேறொன்றுமில்லை என்று சொல்லவில்லை. இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க இக்கோல் எம்மாத்திரம் என்றும் கூறவில்லை. மோசேயினுடைய அணுகுமுறைக்கும் மற்ற இரண்டுபேரின் அணுகுமுறைக்குமுள்ள வேறுபாடு தெரிகிறதா?

ஆயினும், கர்த்தர் அங்கே செயல்படத் தீர்மானித்தபடியால் காரியங்கள் சம்பந்தப்பட்டவர்களின் எண்ண ஓட்டத்திற்கு எட்டாத அளவில் நடந்தேறியது. ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உருவாக்கின தேவனுக்கு நம்மிடத்திலிருப்பதை நமக்காகப் பயன்படுத்துவது இலேசான காரியம். நானும், நீங்களும் நம்முடைய பிரச்சினையின் அளவை எண்ணி இதை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யமுடியும் எனக்கிருக்கும் தேவைக்கு இது எந்த மூலைக்கு? இத்தனை காலம் காத்திருந்தாயிற்று இனியா நடக்கப் போகிறது? என்றெல்லாம் எண்ணலாம். நம்முடைய அறிவு நம்மை அப்படியெல்லாம் கவுட்டி கவுட்டியாகச் சிந்திக்கத் தூண்டும் உண்மைதான். ஆனால், தேவன்

நமக்காகச் செயல்பட ஆரம்பிக்கும் போது கூடாது, முடியாது, நடக்காது என்ற வார்த்தைகளுக்கு அங்கே வேலையே இல்லை. இந்தக் கைம்பெண் பற்றிய சம்பவத்தில் இக்கருத்து மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்கள் அற்புதச் சம்பவத்திலும் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால், அருமையானவர்களே! நம்முடைய இல்லாமையைக் குறித்து, பெலவீனங்களைக் குறித்து, குறைச்சலைக் குறித்து நாம் கவலைப்பட்டுக் கலங்கி நிற்கத் தேவையில்லை. சர்வவல்ல தேவனை நம்பி அவரிடம் சென்று அடைக்கலம் தேடும்போது, நம்முடைய இல்லாமையையும், பெலவீனங்களையும், குறைகளையும் போக்க அவர் வல்லவராயிருக்கிறார். புரிந்து செயல்படுவோம்.

### III. பிரச்சனை தீர தேவன் சொல்லுகிறபடி செய்ய வேண்டும்

அந்தக் கைம்பெண் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னொரு பாடம், தேவன் சொல்லுகிறபடியெல்லாம் செய்யவேண்டும் என்பது.

தேவன் சொல்லுகிறபடியெல்லாம் செய்வது எல்லோராலும் ஆகக்கூடியது அல்ல. யாரெல்லாம் தங்களைச் சமூலமாய் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்களாலே மாத்திரம் அது சாத்தியமாகும். ஆபிரகாம் தேவனுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்திருந்த படியால், தன் தேசத்தையும் தன் இனத்தையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டுப் புறப்பட முடிந்தது (ஆதி.12:1-5). தமஸ்கு செல்லும் வழியில் இயேசுவால் சந்திக்கப்பட்ட பவுல் ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்ற கேள்வியின் மூலம், தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் தன்னை ஒப்புக் கொடுத்தபடியால் தான் தனக்கு இடப்பட்ட கட்டளைப்படி எழுந்து பட்டணத்துக்குள் போக முடிந்தது (அப். 9:6).

ஆன்மீக சிந்தையுள்ள எல்லோரும் இப்படித்தான் செயல்படுவார்கள் என்று நாம் தீர்மானித்து விடக்கூடாது. ஏனெனில், மாற்கு 10-ம் அதிகாரத்தில் வரும் பணக்கார வாலிபனை எண்ணிப் பாருங்கள். இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்பு கூர்ந்து உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. நீ போய் உனக்கு உண்டான வைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு. பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு மனமடிந்து துக்கத்தோடே போய்விட்டான் (மாற்கு 10:21,22).

ஆனால், இந்தக் கைம்பெண் ஆன்மீகச் சிந்தனையைத் தாண்டியவளாய், ஆபிரகாமுக்குள்ளும், பவுலடியாருக்குள்ளும் இருந்த ஆவியைப் பெற்றவளாய்த் திகழ்ந்துள்ளார். எப்படியெனில், அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் இலேசானவைகள் அல்ல. அவளுடைய கடன் தொல்லை கைமீறி போனபடியால் ஊராரின் அவமானத்துக்கும் ஏச்சுப் பேச்சுக்கும் உள்ளானவளாக இருந்திருப்பாள். அப்படிப்பட்ட நிலையில்

அயலகத்தாரிடம் போய் பாத்திரங்களைக் கேட்டால் யார் நம்பிக் கொடுப்பார்கள். விற்றுக் கடனைத் தீர்க்கத் திட்டம் போட்டு விட்டாளோ என்ற ஏளனப் பேச்சுத்தான் காதில் விழும், இப்படி தனக்கிருக்கும் கேவலமான சூழலை எலிசாவிடம் எடுத்துச் சொல்லி வேறு ஏதாவது சொல்லுங்களே என்று கேட்காமல், தேவமனிதர் சொல்லுகிறார் நான் செய்வேன் என்ற தீர்மானத்தோடு செயல்பட்டிருக்கிறாள். அந்த இடத்தில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்?

இக்கைம்பெண்ணோ பாத்திரங்களைக் கேட்டு வாங்கி தேவ மனிதன் கொடுத்த வழி காட்டுதல்படி செய்துள்ளாள். அப்படி தேவ மனிதனின் சொல்லுக்குக் கீழ்படிகிற காரியத்தில் தன் இரண்டு மகன்களையும் இணைத்துக்கொண்டாள். கடனை அடைக்க வழிகேட்டால் இந்த மனிதன் எண்ணெய் வார்க்கச் சொல்லுகிறானே என்று எண்ணவில்லை, அது குறித்து எவ்விதக் கேள்வியும் கேட்கவில்லை. தேவன் தனது தாசன் மூலமாகச் சொல்லுகிறார். நான், செய்கிறேன் அவ்வளவுதான் என்பதே அவள் எண்ணம். ஆனால், நாம் எப்படிப்பட்டவர்களாயுள்ளோம்? நம் எண்ணத்தில் நாமே ஒன்றைத் தீர்மானித்துக்கொண்டு அதன்படியாக தேவன் நமக்குச் செய்ய வேண்டும். நம்மை வழிநடத்த வேண்டுமென்று எண்ணுகிறோம். அது தவறு, அது குஷ்டரோகி நாகமானின் சிந்தை. ஆம் எனக்குள் நினைத்திருந்தேன் ( II ராஜா. 5:11) நாகமானுக்கு சுகம் கொடுக்கவில்லை! மறந்து விடாதீர்கள்!!

இக்கைம்பெண்ணின் சிறப்பு இதோடு முடியவில்லை சொன்னபடியெல்லாம் செய்து முடித்து வேறே பாத்திரம் இல்லையென்ற கட்டம் வந்து ஊற்றெடுத்து வந்த எண்ணெயும் நின்று போன பிறகு தேவனுடைய மனிதனிடத்தில் போய் அதை அறிவித்தாள் ( ராஜா4:7) மீண்டும் அவன் கொடுத்த அறிவுரையின்படி எண்ணெயை விற்றுக் கடனைத் தீர்த்து மீந்ததைக் கொண்டு வாழக்கையை ஜம்ஜம் மென்று நடத்தினாள். ஆம், இரண்டு குமாரரை அடிமைகளாக அனுப்பும் நிலையிலிருந்த இவள் வாழ்க்கை எப்படி மாறிப் போயிற்று பாருங்கள் !

அருமையானவர்களே! பரத்துக்கான நம்முடைய வாழ்வை நாம் எப்படி நடத்திக்கொண்டுள்ளோம்? இப்பூமியில் நாம் வாழ்கின்ற காலங்களில் நமக்கு ஏதாவது ஒரு வகையான பிரச்சனைகள் இருக்கவே செய்யும். அதற்குப் பக்தி குறைபாடு ஒரு காரணமாக இருக்கலாம். ஆயினும் தேவ வழிநடத்துதல் வித்தியாசமானது. நம்முடைய அறிவுக்கு எட்டாதது. ஆனால் அவரை நம்புகிறவர்களுக்கு அது அலாதியானது.

ஆகவே, எந்தச் சூழ்நிலையிலும் நாம் சோர்ந்துபோக வேண்டிய அவசியம் இல்லை. எல்லாமே முடிந்து விட்டது என்று முடிவு கட்டத் தேவையில்லை. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தேவன் நமக்காகக் கிரியை செய்ய முடியும். தேவையென்னவெனில் தேவன் மீதும் அவர் வழிநடத்துதல் மீதும் அசைக்கமுடியாத நம்பிக்கைதான். அந்நம்பிக்கை நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமான நன்மையை ஆசீர்வாதங்களை, பெற்றுத்தரும், என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த இக்கைம்பெண் இதற்கு மிகச் சிறந்த ஆதாரம், கற்றுக்கொண்டு நம் வாழ்வில் அப்பியாசப்படுத்துவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்! ★

# கொர்நேலியவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றனர்

Bro. J.C. சோட்

**அ**ப்போஸ்தலர்களை சத்தியத்தில் வழி நடத்தவும் கிறிஸ்துவின் உபதேசத்தை அவர்களுக்கு நினைப்பூட்டவும் கூடுதலான சத்தியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தவும் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தை அவர்களுக்கு அளிக்கவும் அற்புதங்கள் செய்யும் வல்லமையை அவர்களுக்குத் தருவதற்க்கும் தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களிடம் அனுப்புவதாக கிறிஸ்து வாத்தளித்திருந்தார் என்பதை ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்தோம். இவையனைத்திற்க்கும் காரணம் என்னவெனில், அச்சமயம் வரை புதிய ஏற்பாடு வெளிப்படுத்தபடாமல் இருந்தது. ஆகையால் தங்களுக்கு தேவசித்தத்தை வெளிப்படுத்தும்படியாகவே இவர்கள் தேவனால் அனுப்பபட்டார்களென்று, ஜனங்கள் அப்போஸ்தலர்தளை நம்பும்படியாக ஆவியானவரின் வல்லமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாடு ஒரு முறை வெளிப்படுத்தப்பட்ட பிறகு அற்புத வழி நடத்துதலுக்கு அவசியமில்லாமல் போய்விட்டது. இப்போது, அப்போஸ்தலர்களும் மரித்துப்போய்விட்டனர். எனவே, இன்று நாம் யாரும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக் கொள்ள வேண்டியதில்லை. கிறிஸ்து ஒருவரே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அளிப்பவராக இருப்பதால் இன்று அந்த வல்லமையை யாரும் பெற்றுக்கொள்ள முடியாது.

மேலே குறிப்பிட்டவை உண்மையாக இருந்தால் (அவை உண்மைதான்) பின்னர் கொர்நேலியவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை ஏன் பெற்றனர்? அப்போஸ்தலருடைய நடபடிகள், 10 , 11 அதிகாரங்களை நீங்கள் படித்துப் பார்த்தபின் அதற்கான விடையைக் காண்பீர்கள் என நான் நினைக்கிறேன். கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் புறஜாதியாக இருந்தபடியால் கர்த்தர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்து, யூதர்கள் போலவே புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தேவன் பட்சபாதமற்றவர் என்பதையும் யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் நிரூபித்துக் காட்டவே அவ்வாறு செய்தார் என்ற உண்மை பளிச்சென்று தெரியவரும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 10-ம் அதிகாரத்தில் நாம் கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறோம். கொர்நேலியு நீதிமானும், ஏழைகளுக்கு

தருமங்கள் செய்தவனும், எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவனுமாக இருந்தான். இப்படியிருக்கையில் தேவனுடைய தூதன் ஒருவன் அவனிடம் வந்து அவனுடைய ஜெபங்களும் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நதியில் வந்தெட்டியது என்று கூறினார். பின்னர், தொடர்ந்து கொர்நேலியுவை நோக்கி யோப்பா பட்டணத்துக்கு மனிதரை அனுப்பி பேதுருவை அழைப்பித்து தான் என்ன செய்ய வேண்டுமென அவனிடம் கேட்கச் சொன்னான். ஆனால், கொர்நேலியு என்ன செய்ய வேண்டுமென்று அந்த தூதனே அவனிடம் ஏன் சொல்லவில்லை? ஏனென்றால், நற்செய்தியானது மண் பண்டங்களில் வைக்கப்பட்டிருந்தது. ஆம், மனிதர்களிடம் தான், எனவே தான் பேதுருவைப் போன்ற ஒரு மனிதன் கொர்நேலியுவுக்கும் அவன் குடும்பத்திற்கும் செய்தியை கொண்டு வர வேண்டியிருந்தது. கர்த்தர் என்னிடம் பேசினார் அல்லது ஒரு தூதன் வந்து தேவனின் விருப்பத்தை எனக்கு வெளிப்படுத்தினான் என்றெல்லாம் பலர் பரவலாகச் சொல்லித்திரிகிறார்கள் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகறேன். நிச்சயமாக இவ்விதக் கூற்றுகள் அனைத்தும் வேதாகமதத்தின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபாடானவைகளாகும். மனிதனுடன் கர்த்தர் இன்று அவ்வாறு நடந்து கொள்பவராக இருப்பின் ஏற்கனவே நாம் பார்த்தது போல கொர்நேலியுவிடம் பேதுருவை அனுப்புவதற்க்குப் பதிலாக அந்த தூதனே கொர்நேலியுவிடம் என்ன செய்ய வேண்டும் என்று ஏன் சொல்லவில்லை?

ஆனால், இப்போது அந்தக் காட்சி யோப்பா பட்டணத்தில் சீமோன் என்ற தோல் பதனிடுகிறவன் வீட்டிற்குத் திரும்புகிறது. அங்கே பேதுரு ஜெபம் பண்ண மேல்வீட்டில் ஏறியதை நாம் பார்க்கிறோம். அவன் மிகுந்த பசியுடன் சாப்பிட மனதாயிருந்த வேளையில் அவன் ஞான திருஷ்டியடைந்து தன் முன்னே சகலவித நாலுகால் ஜீவன்களும் காட்டு மிருகங்களும் ஊரும் பிராணிகளும் ஆகாயத்துப் பறவைகளும் இருக்கக் கண்டான். மேலும் பேதுருவை நோக்கி அவற்றை அடித்துப்புசி என ஒரு சத்தம் உண்டாகவும் பேதுரு அந்த தரிசனத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கும் போது கொர்நேலியு அனுப்பிய மனிதர்கள் பேதுருவை தேடிக் கொண்டு வந்தனர். 'பின்னர் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களுடனே கூடப் போ என ஆவியானவர் பேதுருவிடம் கூறினார்.

அதன் பின்னர் வசனங்கள் இவ்விதம் தொடருகின்றன : மறு நாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சினேகிதரையும் கூட வரவழைத்து அவர்களுக்காகக் காத்திருந்தான். பேதுரு உள்ளே

பிரவேசிக்கிற பொழுது கொர்நேலியு அவனுக்கு எதிர் கொண்டு போய் அவன் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து; எழுந்திரும் நானும் ஒரு மனிதன் தான் என்றான். அவனுடனே பேசிக்கொண்டு உள்ளே போய் அநேகர் கூடி வந்கருக்கிறதைக் கண்டு அவர்களை நோக்கி அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்கும் வரத்துமாய் இருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறந்திருக்கிறீர்கள் ; அப்படியிருந்தும் எந்த மனிதனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர்பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்.

அதற்கு கொர்நேலியு நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசமிருந்து ஒன்பதாம் மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பிரகாசமள்ள வஸ்திரம் தரித்த மனிதன் ஒருவன் எனக்கு மன்பாக நின்று; கொர்நேலியுவே உன் ஜெபம் கேட்கப்பட்டது. உன் தான தருமங்கள் தேவ சந்நிதியில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி பேதுரு என்று மறு பேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக அவன் கடலோரத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். அந்தப் படியே நான் உடனே உம்மிடத்திற்க்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கம்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும் எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே யோவான் ஞானஸ்தானத்தைக் குறித்துப் பரசங்கித்த பின்பு கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திறிந்தார். யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலை

செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பி பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல் அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக்குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள் என்றான்.

இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும் பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரம்மித்தார்கள். அப்பொழுது பேதுரு நம்மைப்போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள் அப்.10:24-48).

பின்னர் அப்போஸ்தலருடைய நடபடிகள் 11 ம் அதிகாரத்தில் பேதுரு எருசலேம் வரை சென்று செசரியாவில் கொர்நேலியுவோடும் அவன் வீட்டாரோடும் நடைபெற்ற அனைத்தையும் சீடர்களிடம் விவரிக்கிறான். சகல விபரங்களையும் கூறிய பின்னர் நான் பேசத் தொடங்கின போது பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். ஆதலால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியினருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி தேவனை மகிமைப் படுத்தினார்கள் என்று பேதுரு கூறுகிறார் (அப்.11:1518). ★

பெண்கள் பகுதி

# அடையாளம், ஞானம், சிலுவை

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே ஸ்தோத்திரம். இம்மாதமும் தேவனுடைய வார்த்தைகளை நாம் சேர்ந்து படிப்பதற்கு அவர் அழித்த கிருபைகளுக்காய் அவருக்கு ஸ்தோத்திரம்.

யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் (1கொரி.1 :22,23). இந்த வசனப் பகுதி அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு நிருபம் எழுதும்போது குறிப்பிடுகிறார். முதலாவதாக, வேத வசனங்கள் எல்லாம் தேவனுடைய ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். ஏதோ பவுல் சொந்தமான கருத்துக்களை எழுதியிருக்கிறார் என்று எண்ணாமல் தேவன் பவுலைக் கொண்டு எழுதிக் கொடுத்திருக்கிறார் என்று முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நிருபம் கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதப்பட்டது. இந்த சபை அப்.பவுலாலே ஆரம்பிக்கப்பட்டது. தன்னுடைய மூன்று சுவிசேஷ பயணங்களுள் இரண்டாவது பயணத்தின் போது அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு வந்து சேருகிறார். தனியாக முற்றிலும் அறிமுகமில்லாதவனாக கையில் போதிய பணம் இல்லாதவனாக இந்த பட்டணத்திற்குள் காலெடுத்து வைக்கிறார். மக்கதொனியாவிலிருந்து கொண்டு வந்த கொஞ்ச தொகையும் தீர்ந்து போகவே தன்னுடைய சொந்த தேவைகளை சந்திக்க என்ன செய்வது என்று சிந்திக்கலானார். இப்படியிருக்கும்போது, அவன் ஆக்கில்லா என்றும் நாமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாலையும் அங்கே கண்டு அவர்களிடத்திற்குப் போனான். அவர்கள் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள். தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி வேலை செய்து கொண்டு வந்தான் (அப்.8:1,2,3).

கொரிந்து பட்டணம் தனசம்பத்தும் பெருங்கீர்த்தியுள்ளதும், அதிலுள்ளவர்கள் அக்காலத்து நாகரீகத்தில் பேர் போனவர்களாயும் இருந்தார்கள். கிரேக்க தேசம் கொரிந்து பட்டணத்தால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கொரிந்து ஒரு துறைமுகப் பட்டணம். இத்தாலியாவுக்கும் சின்ன ஆசியாவுக்கும் ஜனங்கள் போக்குவரத்தாயிருந்தபடியினால் கொரிந்து பட்டணத்தில் வியாபாரம் அதிகமாய் நடந்தது. மேலும், உலகத்தில் பிரஸ்தாபமுள்ள சர்வகலாசாலை இருந்ததினால் பல தேசங்களிலுமிருந்து கல்வி கற்கும்படி அநேக மாணாக்கர் அங்கு வருவார்கள். கொரிந்து பட்டணத்தின் விபரங்களை இதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

இப்படியொரு இடத்திற்குத்தான் அப். பவுல் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபிப்பதற்காக ஊழிய பாரம் உள்ளவராய் வந்து சேருகிறார். அங்கிருந்து சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் போதுதான், யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள் நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் என்கிறார்.

இந்த யூதர்கள் இருக்கிறார்களே அவர்கள் தேவனுடைய வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ள ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் கேட்பார்கள். இப்படியே இவர்கள் பயிற்றுவிக்கப்பட்டும் போனவர்கள். ஒரு பேருண்மையை ஒரு ஆசிரியர் நிலைநாட்ட வேண்டுமென்று நினைத்தால் அவர் ஒரு சோதனையைச் செய்து காட்டியாக வேண்டும். நமதாண்டவராகிய இயேசு நமக்காக இந்தப் பூலோகத்திற்கு வந்து வாழ்ந்து 3½ ஆண்டுகள் போதனைகள் செய்தபோது பரலோகத்தின் பேருண்மைகளையும் வரப்போகிற இராஜ்ஜியத்தையும் குறித்து போதனைகளைச் செய்தபோது தன்னைச் சுற்றிலுமிருந்த யூதர்கள் எப்போதுமே அடையாளங்களையே கேட்பார்கள். உதாரணமாக (மத்.12:36,37) ல் பார்க்கும்போது இயேசு கிறிஸ்து நம் பேசும் வார்த்தைகள் நம்மை நியாயந்தீர்க்கிறது என்று போதிக்கும்போது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி; போதகரே உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்கிறார்கள் (12:38). மேலும், மத். 16:1-ல் பரிசேயரும் சதுசேயரும் அவரைச்

சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து வானத்திலிருந்து நீர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள். இயேசு பதிலுக்கு யோனாவின் அடையாளமேயன்றி வேறொரு அடையாளம் உங்களுக்கு இல்லை என்பார். அதாவது, தன்னுடைய மரணம், உயிர்த்தெழுதல் பற்றித்தான் அவருடைய போதகமே இருந்தது.

மேலும் 8:11 – லும் ஏழு அப்பம் சிறு மீன்களையும் வைத்து நாலாயிரம் பேரை போஷித்த பிறகு பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கி அவரைச் சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள் என வாசிக்கிறோம்.

மேலும், யோவான் 4:48 – லும் இதைத்தான் பார்க்கிறோம். சமாரியாவிலுள்ள சீகார் ஊரிலே அங்குள்ள ஸ்திரீயிடம் தாகத்துக்குத் தா என்று கேட்டு பிதாவை எங்கும் தொழுது கொள்ளும் காலம் வரை பேசிவிட்டு வந்து கொண்டிருக்கும் இயேசுவிடம் தன் மகனை குணமாக்க வர வேண்டும் என்று கேட்டுக்கொண்ட அந்த மனிதரிடம் அப்பொழுது இயேசு அவனை நோக்கி நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார். இவன் கேள்வி ஒன்று இயேசுவின் பதில் ஒன்று. பன்மையில் பதில் அளிக்கிறார். ஆக யூதர்கள் எப்போதும் அடையாளங்களையும் அற்புதங்களையும் எதிர்பார்த்தே இருந்தார்கள். ஒருகாரியத்தை நம்புவதற்கு இவைகள் யூதர்களுக்குத் தேவைப்பட்டது. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

சரி, கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். இவர்கள் தத்துவங்களுக்கு சொந்தக்காரர்கள். யூதர்களுக்கு வேண்டிய அடையாளங்களும் அற்புதங்களும் கொடுக்கப்பட்டும் அவைகள் அவர்களை திருப்திபடுத்தவில்லை. நேர்மாறாக, கிரேக்கர் இவைகளை விரும்பாமல் ஞானம் வேண்டும் என்று அலைந்தார்கள். எந்த ஒரு காரியத்தையும் அவர்களுக்கு நிரூபித்துக்காட்ட வேண்டும். இயேசுவின் உயிர்த்தெழுதல் உட்பட உலக ஞானத்திற்குத்தான் முதலிடம் கொடுத்தார்கள். ஒவ்வொரு காலத்திலும் தங்கள் சுயஞானத்திற்கேற்ப தெய்வங்கள் ஏற்படுத்தி வழிபட்டுக் கொண்டுதான் வருகிறார்கள்.

அப். பவுல், அத்தேனே பட்டணத்தில் தினந்தோறும் சம்பாஷனை பண்ணிக்

கொண்டிருந்தான். அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் பவுலோடே வாக்குவாதம் பண்ணி இந்த வாயாடி என்ன பேசுகிறான் என்றார்கள். இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தது அந்நிய தேவதைகளை அறிவிக்கிறதாகக் காணப்பட்டது. மேலும், மார்ஸ் மேடைக்கு பவுல் சென்றபோது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலி பீடத்தைக் கண்டேன். எங்கே தாங்கள் அறியாத ஒரு தேவன் இருந்து அவரை வணங்காவிட்டால் குற்றம் வந்து விடுமோ என்று நினைத்து இப்படியும் ஒரு பலிபீடத்தை கட்டிவைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் ஞானம் எப்படியிருந்திருக்கும் என்று பாருங்களேன். ஆக, கிரேக்கர் அப் பவுலுக்குச் செய்த கொடுமைகளை நாம் அப்.18ம் அதிகாரத்தில் படிக்கலாம்.

இருப்பினும், பவுல் கொரிந்து பட்டணத்தில் கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தினான். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் 1½ ஆண்டு அங்குதங்கி தேவ வசனத்தை உபதேசித்துக்கொண்டு வந்தான். தன்னால் உபதேசிக்கப் பட்டவர்களின் மத்தியில் உள்ள பிரச்சனைகளால்தான் இவ்வாறாகப் பேசுகிறார். பவுல் நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை பிரசங்கிக்கிறோம் என்கிறார்.

பிரியமானவர்களே! இயேசு ஏன் சிலுவையில் அறையப்பட வேண்டும்? சிலுவையில் அவர் சிந்தின இரத்தம்தான் நம்மை தேவனோடு சேர்க்கிறது. அவர் சிலுவையில் மதித்து உயிர்த்தெழுந்த தினால்தான் நமக்கு இரட்சிப்பு கிடைத்தது. நாம் தண்ணீருக்குள் சென்று பாவத்துக்கு மரித்து அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்தானத்தினாலே கிறிஸ்துவுடன் கூட அடக்கம் பண்ணப்பட்டு வெளியே வரும்போது அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நமக்கு இரட்சிப்பு வேண்டும் என்பதற்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார். இன்றைக்கும் இதே பிரசங்கம்தான் தேவைப்படுகிறது. அப் 2ம் அதிகாரத்தில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்ட 3000 பேர்களால் முதல் முதல் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

அன்றைக்கு எப்படி யூதர்களுக்கு அடையாளம் தேவைபப்பட்டதோ? கிரேக்கர்களுக்கு ஞானம் தேவைப்பட்டதோ அதேபோல்தான் இன்றும் மக்கள் இயேசுவை பல்வேறு காரணங்களுக்காக தான் தேடுகிறார்கள். கிறிஸ்துவின் உண்மையான எளிமையான உபதேசம் அநேகருக்கு இன்றும் இடறலாகவும், பைத்தியமாகவும் தோன்றுகிறது. வேறு ஒரு சத்தியம் இல்லை. உண்மையில், ஒருவர் பரலோகத்தைச் சுதந்தரிக்க வேண்டுமென்றால் வேதாகமம் கூறுகிறபடி இன்னும் சொல்லப் போனால், இயேசுவின் உபதேசம் அப்போஸ்தலர்களின் உபதேசம் இவைகளை தேடிப் படித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். வேதத்தில் எழுதியிருப்பதை விடுத்து எந்த ஒரு வெளிப்பாடும் இல்லை. வெளிப்பாடு வேண்டும் என்று அலைந்தால் அது பைத்தியகாரத்தனம்தான்.

அன்பானவர்களே! தேவன் நம் வாழ்வில் ஒவ்வொரு வருடத்தையும் கிருபையாய் கூட்டிக் கொடுத்து வருகிறார். இந்த காலத்தைப் பிரயோஜனப்படுத்தி நம் பாரம்பரியம், வேதம் சொல்லாத ஆராதனை முறை, பாட்டு, கர்த்தருடைய பந்தி, கர்த்தருக்குக் கொடுப்பது போன்ற காரியங்களை எப்படி செய்து கொண்டிருக்கிறோம் என்று சுய பரிசோதனை செய்து பார்ப்போம்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுதான், அவர் கட்டிய கிறிஸ்துவின் சபைதான் நம்மை பரலோகம் சேர்க்கும். தேடுவோம், ஆராய்வோம், கீழ்படிவோம். கிரேக்கர்களைப் போல சுய ஞானத்தைப் பெரிதாக நினைக்கவேண்டாம்.அடையாளம் அற்புதம் இன்று அவசியமில்லை. இயேசு நமக்காகத்தான் சிலுவையில் மரித்தார்.

அவர் தமக்குச் சொந்தமானதினாலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:11). இதுதான் வேதத்திலே மிகவும் சோகமான வசனம். இதைப் போன்றுதான் இன்றைக்கும் நமக்காக இரத்தம் சிந்தி மரிந்து சம்பாதித்த கிறிஸ்துவின் சபையில் நாம் இல்லையென்றால் அதே சோகம்தான் இயேசுவிடம் இருக்கும். அன்பான தேவன் தன் ஒரே குமாரனையே கொடுத்து நம்மை அவரோடு சேர்க்க எடுத்த மாபெரும் திட்டத்தை நாம் அற்பமாய் எண்ண வேண்டாம் தாழ்மையாய் கீழ்ப்படிவோம். ★

வாலிபர் பகுதி

# இருதயத்தை வெறுமையாக்காதே

சகோ. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிபர்களுக்கு நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாகச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய நாட்களில் சில வாலிபர்கள் தங்கள் இருதயம் திருடப்பட்டுவிட்டதென்றும், அது தங்கள் வசம் இல்லை என்றும் அது தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லையென்றும் கவிதைகளை கட்டவிழ்த்துவிடுவதை நாம் கவனிக்கிறோம். இந்த இருதயத்தை மனோதத்துவ நிபுணர்கள் எண்ணங்களின் இருக்கை என்று சொல்கிறார்கள். ஆம் வண்ணமயமான எண்ணங்கள் இந்த இருதயத்திலிருந்து இடம்பெயர்வது உண்மைதான் என்பதை இருதயத்தை இறுக்கிக்கொள்கிறவர்கள் கூட ஒத்துக்கொள்கிறார்கள். சரி, இந்த இருதயத்தை உருவாக்கின தேவன் இதைப் பற்றி என்ன சொல்கிறார் என்று கவனிப்போம். **எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? "கர்த்தராகிய நானே ஒவ்வொருவருக்கும் அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு இருதயத்தை ஆராய்கிறவரும் சோதிக்கிறவருமாயிருக்கிறேன் என்று** சொல்கிறார்(எரேமியா 17 : 9). இவ்வசனத்தில் இருதயத்தின் நினைவுகளை அறிகிறவர் தேவன் ஒருவரே என்று பார்க்கிறோம்.

இங்கே நான் ஒட்டுமொத்த உடலுக்கும் இரத்தநாளங்கள் வழியாகப் இரத்தத்தை அனுப்பிக்கொடுக்கும் இருதயம் என்னும் உறுப்பைப்பற்றி பேசவில்லை. மனிதக் கண்களால் காணமுடியாத மனதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். மனித மனம் ஒரு குரங்கு என்று சொல்வார்கள். ஏனென்றால், அது குரங்கைப் போல் தாவித்தாவிச் செல்கிறது. இந்த மனம் இனம் புரியாத ஆசைகளால் அலைக்கழிக்கப்படுகிறது. இனி இந்த மனம் அல்லது இருதயத்தை நிறுத்திப்பார்க்கும் தேவன் இதை ஏன் நாம் வெறுமையாக வைத்துக்கொள்ளக்கூடாது என்று அருமையாகச், சொல்லும் காரியங்களை வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் பார்ப்போம்.

I. **வெறுமையான இருயத்தின் அபாயங்கள்.**

நம் இருதயம் வீடு போன்ற ஓர் அமைப்பாகும். இதில் பல மோசமான சிந்தனைகள் குடியிருக்கின்றன. இதிலிருந்து தான் பல தீங்கிழைக்கும் தீய எண்ணங்கள் ஊற்றெடுத்து வருகின்றன. வேதாகமம் இதை உறுதி செய்கிறது. எப்படியெனில் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும் கொலைபாதகங்களும் விபஷணங்களும் வேசித்தனங்களும களவுகளும் பொய்சாட்சிகளும் புறப்பட்டு வரும் (மத்தேயு 15 :19). அதேநேரத்தில் பொல்லாத காரியங்களும் இந்த இருதயத்திலிருந்து தான் ஊற்றெடுத்து வருகின்றன (மத்தேயு 12 : 35 ) .எனவே இருதயம் என்னும் வீட்டில் இவ்விரு துருவங்களும் குடியிருக்கின்றன. நாம் கிறிஸ்துவினிடத்தில் வரும்போது இருதயமெனு நம் வீடு சுத்தரிக்கப்படுகிறது (எபிரெயர் 10 : 22 ). அதற்குப்பிறகு, நம் இருதயத்தை எவற்றால் நிரப்பவேண்டுமென்று நமக்கு பொறுப்பு இருக்கிறது. இவ்வுலகிலுள்ள அத்தனை தகவல்களையும் ஏற்றுக்கொள்வதற்கு சேமித்து வைப்பதற்கு இந்த இருதயத்தில் இடமிருக்கிறது. இருந்தபோதிலும், நாம் எவைகளைக் கொண்டு நம் இருதயத்தை நிரப்புகிறோமோ அப்படியே நாம் இருக்கிறோம். ஆவிக்குரிய காரியங்களால் நம் இருதயத்தை நிரப்பினால் ஆவிக்குரியவர்களாக இருப்போம். மாம்சபிரகாரமான காரியங்களால், நிரப்பினால் மாம்சத்திற்குரியவர்களாக இருப்போம். அதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் உண்மையுள்ளவைகளெவைகளோ ஒழுக்கமுள்ளைவைகளெவைகளோ நீதியுள்ளவைகளெவைகளோ கற்பனையுள்ளவைகளெவைகளோ அன்புள்ளவைகளெவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துகொள்ளுங்கள் என்று நமக்கு புத்திமதி சொல்கிறார் (பிலிப்பியர் 4 : 8).

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது நம் இருதயத்திலிருந்து பழைய சிந்தனைகள் முற்றிலும் அகற்றப்படுகின்றன. அதற்குப்பிறகு நம் இருதயத்தை வெற்றிடமாக வைத்து வேடிக்கை பார்க்கக்கூடாது. மாறாக ஆவிக்குரிய காரியங்களைக்கொண்டு நம் இருதயத்தை நிரப்பவேண்டும், இல்லையென்றால், கொடிய சிந்தனைகள் வந்து நம் இருதயத்தில் குடியேறி நம் குடியைக்கெடுத்து விடும். நாம் பல வாலிபர்களுடைய வாழ்க்கையைப்பார்க்கும் போது ஆரம்பத்தில் கிறிஸ்துவுக்குள் வரும்போது இருதயத்தை வெறுமையாக்கி கர்த்தருக்கடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். பின்பு இருதயத்தில் எவைகள் இடம்பெயர்கிறதோ தெரியவில்லை தடம் பதிக்க வேண்டிய அவர்கள்

தடுமாறுகிறார்கள். இதற்கெல்லாம் பிரதான காரணம் ஆரம்பத்திலேயே அவர்கள் ஆவிக்குரிய காரியங்களால் தங்கள் இருதயங்களை நிரப்பாதது தான். அதுமாத்திரமல்ல, ஆவிக்குரிய காரியங்களால் நம் இருதயம் நிரப்பப்படாதபோது உலகக்காரியங்கள் அதற்குள் உட்புகுந்து உலைவைத்து விடுகிறது. மேலும், போகப்போக நம் இருதயம் கடினமாகி கட்டுக்கடங்காமல் போய்விடுகிறது. அப்போது நம் முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாகிவிடுகிறது.

II. **அருமையான தேவ ஆலோசனைகள்.**

நம் இருதயத்தை வெறுமையாக வைத்திருந்தால் பிசாசு உலகக்காரியங்களை உட்புகுத்தி நம்மை உருக்குலைத்துவிடுவான் என்று நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படியென்றால், ஆவிக்குரிய காரியங்களால் நம் இருதயத்தை நிரப்பவேண்டும். அதை எப்படிச் செய்வது? பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளை நாடவேண்டும். அதாவது, பரத்திற்குரிய காரியங்களை நாடவேண்டும் (கொலோசியர் 3 : 2). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் நம் இருதயத்தில் வாசமாயிருக்க நாம் அனுமதிக்கவேண்டும்(கொலோ. 3 : 16) நம் மனம் புதிதாகிறதினாலே ஒரு நிலையிலிருந்து அதாவது நம் பழைய நிலையிலிருந்து புதிய நிலைக்கு முற்றிலுமாக மாறவேண்டும்(ரோமர்12:2).தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு வாய்ப்புகள் எப்பொழுதெல்லாம் கிடைக்கிறதோ அந்த வாய்ப்பை இறுகப்பிடித்துக் கொண்டு ஆவிக்குரிய பிரகாரமாக வளர வேண்டும்(1 பேதுரு 2 : 3). பொருளாதார ரீதியாக நாம் வளர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக வளரவேண்டுமென்பது நம் விருப்பப்பட்டியலில் இருக்கிறதா? அல்லது ஆவிக்குரிய பிரகாரமாக நாம் இன்னும் குழந்தைகளாகவே இருக்க விரும்புகிறோமா? ஒரு குழந்தை வளராமலிருந்தால் அது பெற்றோருக்கு எவ்வளவு மனவலியைக் கொடுக்கும்? அப்படிப்பட்ட உணர்வைத்தான் இது நம் பரமபிதாவுக்கும் கொடுக்கும்?

பிரியமான வாலிபர்களே! நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளரும் போது கிறிஸ்துவின் சிந்தனையால் நாம் நிரப்பப்படுவோம். நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருந்தால் நம் வாழ்க்கை என்னும் நதியில் சந்தோஷமும் சமாதானமும் சம்ரிதியும் பாய்ந்தோடும். எனவே, அருமையான வாலிபர்களே! இந்த வாலிப வயதில் உங்கள் மனதை அலைபாயவிடாமல் அதை, கட்டுப்படுத்தி கிறிஸ்துவின் சிந்தையால் சிறைப்பிடித்து அதினுள் ஆவிக்குரிய காரியங்களை நிரப்பி தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். தேவன் தாமே அதற்கு உதவிசெய்வாராக! ஆமென்! ★

சிறுவர் பகுதி

# சுத்தமான நாவு

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் எப்படி இருக்கிறீர்கள்? நாங்கள் உங்களுக்காக எப்பொழுதும் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். பிள்ளைகளே இந்த சிறு வயதிலிருந்தே நீங்கள் தேவனுக்கு பிரியமானவர்களாக நடந்து கொள்வது உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதங்களைத் தரும். சரி இந்த மாதம் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்க போகிறோம். அது என்னவென்று பார்க்கலாம் வாங்க.

நம்முடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் எப்படியிருக்க வேண்டும் என்று தெரியுமா உங்களுக்கு? உதாரணமாக உங்கள் பள்ளிகளில் உங்கள் நண்பர்கள் சிலர் தகாத வார்த்தைகளைப் பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். சில சமயங்களில் அப்படிப்பட்ட தகாத வார்த்தைகளை நீங்கள் கூட பயன்படுத்தியிருக்கலாம். கோபமாக இருக்கும்போதோ அல்லது எரிச்சலைடையும் போதோ அவ்வாறு நடக்க வாய்ப்புள்ளது. அது ஒரு பெரிய விஷயம் அல்ல என்ற சிந்தை கூட வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் கிறிஸ்துவை அறிந்த பிள்ளைகளாகிய நீங்கள் எப்படியிருக்க வேண்டும்?பரிசுத்த வேதாகமப் அதைப்பற்றி என்ன கூறுகிறது? அதை தான் இந்தமாதம் நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

பிள்ளைகளே! கொலோசெயர் 3 : 17 ல் "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது எதைச்செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் என்று வேதம் கூறுகிறது. இந்த வசனத்தினுடைய அர்த்தம், நாம் பேசுகிற, வார்த்தையாக இருந்தாலும், செய்கின்ற எந்த செயல்களாக இருந்தாலும் அவைகள் பிதாவிற்குப் பிரியமாகவும் மகிமையாகவும் இருக்க வேண்டும்.

எனவே, வீட்டிலிருந்தாலும் பள்ளிக்கூடங்களில் இருந்தாலும் நண்பர்களோடு இருந்தாலும் நீங்கள் பேசும் வார்த்தைகளை குறித்து கவனமாக இருக்கவேண்டும். ஏனென்றால் அவைகளாலே நாம் நம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று வசனம் சொல்லுகிறது.

எபேசியர் 4 : 29 ல் கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்... என்று பவுல் எழுதுகிறதை வாசியுங்கள். சங்கீதம் 34 : 13 ம் வசனத்தில், உன் நாவை பொல்லாப்புக்கு உன் உதடுகளைக் கட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள் " என்று வாசிக்கிறோம். எனவே தேவன் நமக்கு கொடுக்கும் ஒரு முக்கியமான அறிவுரை நம் நாவை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அருமை பிள்ளைகளே, தேவனைத் துதிக்கிற உங்கள் வாயிலிருந்து அவருக்குப் பிடிக்காத கெட்ட வார்த்தைகள் வரவே கூடாது. அதைத் தேவன் விரும்புவதில்லை. எனவே உங்கள் நாவை கவனமாக பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் நாவினாலே தேவனுக்குப் பிரியமான நல்ல வார்த்தைகளை மட்டுமே பேச முயற்சி செய்யுங்கள். தேவன் உங்களை நன்மையினால் முடிசூட்டுவார். ஆமென். ★

## யாக்கோபு நிருபத்தில் நாவு

1. அது ஒரு நெருப்பு (3:6)
2. அது அடங்காது (3:8)
3. அது பொல்லாங்குள்ளது (3:8)
4. அது அநீதி நிறைந்தது (3:6)
5. அது பெருமை நிறைந்தது (3:6)
6. அது கறைப்படுத்துகிறது (3:6)
7. அது ஆயுள் சக்கரத்தைக் கொழுத்திவிடுகிறது (3:6)
8. அது விஷம் நிறைந்தது (3:8)
9. அது தேவனைத் துதிக்கிறது (3:9)
10. அது பொய் சொல்லுகிறது (3:14)

மருத்துவ ஆலோசனை

# மழை வெள்ளம் ஏற்படுத்தும் பாதிப்புகள்

Bro. ஏபில் நாயகம்

மழை காலங்களில் அதிகமாக உடல் நலக் குறைவு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இதற்கு முக்கியமான காரணம் சுத்தமில்லாத தண்ணீர். கணமழை பெய்யுங் இடங்களில் தண்ணீர் தேங்கும் வாய்ப்புகள் அதிகம். அதோடு சில சமயங்களில் சுத்தமில்லாத தண்ணீர் குடிநீரோடு கலக்கும் வாய்ப்பும் உண்டு. இவை இரண்டுமே மழை காலங்களில் ஏற்படும் நோய்களுக்கான காரணம். என்னென்ன நோய்கள் வரும் எதினால் வரும், வராமல் தடுப்பது எப்படி என்று கீழே படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

## காய்ச்சல்

**1. லெப்டோஸ்பைரோஸிஸ் (Leptospirosis) (எலி சிறுநீர் காய்ச்சல்)**

எலியின் கழிவு/சிறுநீர் தேங்கிய தண்ணீரில் கலந்து விடுகிறது. அவைகள் நாம் தண்ணீரில் நடக்கும் போது நம் கால்களில் சிறு காயம் இருந்தால் அதன் வழியாக உட்புகுந்து தாக்கும், மற்றும் இந்தத் தண்ணீர் கலந்த குடிநீரைக் குடிப்பதின் மூலம் வியாதி ஏற்படும்.

**2. டைபாய்டு**

மழை காலங்களில் ஏற்படும் அதிகமான நீரோட்டம் சில சமயங்களில் மனித கழிவுகளோடு கலந்துவிடுவதால் வருகிறது. தண்ணீர் வரும் குழாய்களில் கசிவு இருந்தால் தண்ணீரில் கலப்படம் ஏற்பட்டு அதைக் குடிப்பவருக்கு டைப்பாய்டு காய்ச்சல் வரும்.

**தவிர்க்கும் வழிகள்**

- தண்ணீரைக் கொதிக்கவைத்துக் குடிப்பது
- காலில் காயங்கள் இருந்தால் தேங்கிய தண்ணீரில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## வயிற்றுப் போக்கு / மஞ்சள் காமாலை

**1. காலரா ( Cholera )**

அனைவருக்கும் தெரிந்த ஒரு வியாதி. மழைக்காலங்களில் நல்ல தண்ணீரோடு தேங்கிய நீரோ அல்லது கழிவு நீரோ கலக்கும் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு வியாதி சரியான நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்ளா விடில் உயிரை மாய்க்கும் ஒரு வியாதியாகும்.

**தவிர்க்கும் வழிகள்**

- ஒரே வழி : நன்கு கொதிக்கவைத்த குடிநீரைப் பருகுவது.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை டிசம்பர் மாத இதழில்)**

1. மர்மசந்தின் உயிர் எதிலே இருக்கிறது?
2. ஆரோன் யாருக்காக பாவ நிவிர்த்தி செய்ய வேண்டும்?
3. பிறனிடத்தில் நீ என்ன செய்ய வேண்டும்?
4. பரிசுத்தமானவைகளை என்ன செய்யக்கூடாது?
5. வயலின் ஓரத்தை ஏன் அறுக்கக் கூடாது?
6. திப்ரியின் குமாரத்தி யார்?
7. ஐம்பதாம் வருஷத்தை தேவன் எப்படி குறிப்பிடுகிறார்?
8. எதை முறித்துப்போடுவேன் என்று தேவன் சொல்லுகிறார்?
9. தேவன் மோசேயிடம் கட்டளையை விதித்தது எந்த மலையில்?
10. யாக்கோபு ஈசாக்கு ஆபிரகாமோடே தேவன் என்ன பண்ணினார்?

(லேவியராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்!)

## அக்டோம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து (1:1)
2. அதிகாரம்27, வசனங்கள் 859
3. ஆரோனையும் அவன் குமாரரையும்(2:10)
4. ஏழு நாள் (8:35)
5. சணல் நூல் (6:10)
6. நாதாப், அபியூ (10:1)
7. எலெயாசர் இந்தாமார்(10:12)
8. நான் பரிசுத்தர்(11:45)
9. எட்டாம் நாளில்(12:3)
10. முகங்குப்புறவிழுந்தார்கள்(9:24)

## சரியான பதில் எழுதியவர்கள்

1. M. செல்வம் - வெள்ளலூர்
2. வளர்மதி ராஜ்குமார் - காங்கயம்
3. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
4. J. மாலதி ஜெயக்குமார் - மூலனூர்
5. ர. அபினேஷ் - மூலனூர்
6. ரூபவல்யா - தூத்தூக்குடி
7. V. C. ஷைலா அலெக்ஸ் - கன்னியாகுமரி
8. N. இந்திரா ஜெபக்கனி - நாசரேத்
9. S. சாந்த குமாரி - நாசரேத்
10. N. ஜெபத்தாய் - நாசரேத்
11. J. ஜெமீலா செல்லையா - நெல்லை
12. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
13. M. சிப்போரா - திருச்சி
14. V.S.S பால் ராஜ் - மதுரை

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** புதிய ஏற்பாட்டு சபை என்றால் என்ன?

**பதில் :** புதிய ஏற்பாடு சபை என்பது மத்தேயு 16:18 – ல் இயேசு தாம் கட்டுவேன் என்று வாக்குத்தத்தம் செய்த சபையாயிருக்கிறது. மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை அநேகர் சபை என்பது செங்கல், சிமெண்ட் கலவை கம்பி மரம் போன்றவைகளை உள்ளடக்கியது என்ற தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அப்போஸ்தலர் 20:28 – ல் இயேசு தம்முடைய சுயஇரத்தத்தினாலே சபையை வாங்கினார் என்று வாசிக்கிறோம். ஆகவே, சபை என்பது ஒரு கட்டிடத்தைக் குறிக்கும் விதத்தில் வேதாமத்தில் எங்குமே சொல்லப்படவில்லை.

புதிய ஏற்பாட்டில் எக்லீசியா என்கிற கிரேக்க வார்த்தை தமிழில் சபை என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வார்த்தையானது அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்ற பொருளைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அப்படியானால், கிறிஸ்துவின் விசுவேஷத்தால் அழைக்கப்பட்டவர்கள் அவரை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து மனந்திரும்பி கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்படும்பொழுது பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே சேர்க்கப்பட்டார்கள்(அப் : 47). மனிதனின் இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் இரத்தம் விலைக்கிரையமாகக் கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர் 20:28 – ல் தமது சுயஇரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தனது சபை என்று சொல்லப்பட்டுள்ளபடியால் சபை கிறிஸ்துவுக்கு மட்டுமே சொந்தமானது என்பது தெளிவாகிறது.

புதிய ஏற்பாடு சபை கிறிஸ்துவின் உபதேசங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்னும் பரிசுத்த ஆவியின் வார்த்தைக்கேற்ப ஆதி அப்போஸ்தலர்கள் எவைகளை உபதேசங்களாகப் போதித்தார்களோ அவைகளையே நாமும் பின்பற்றும் போதுதான் கிறிஸ்து விலைக்கிரயமாகச் சபையிலே அங்கமாக முடியும். கிறிஸ்துவுக்கு ஒரேயொரு சரீரம் தான் உண்டு. அதுபோல அவர் ஸ்தாபித்தது ஒரேயொரு சபைதான் அச்சபைக்கு அவரே ஸ்தாபதர், அவரின் உபதேசங்களே பாவத்திலிருந்து ஒருவனை இரட்சிக்கும் வல்லமை பெற்றது. எனவே, இன்றைய நாட்களில் வாழும் நாமும் கிறிஸ்து தமது சுயரத்தத்தினாலே சம்பாதித்த சபையை அடையாளம் கண்டு அந்த உபதேசத்தின் சத்தியத்திற்கு நம்மை முழுமையாக ஒப்புக் கொடுக்கும் போதுதான் விலையேறப் பெற்ற இரட்சிப்பை விலையில்லாமல் பெறமுடியும். ஆகவே, கிறிஸ்து பல சபைகளை அல்ல அவர் ஒரேயொரு சபையைத்தான் கட்டினார் அது தான் புதிய ஏற்பாடு காட்டும் கிறிஸ்துவின் சபை ( ரோமர் 16:16). ★

# பிந்தின ஆலயத்தின் மகிமை

(ஆகாய் 2:9)

Bro. பாண்டியன்

**ஆ**லயம் என்பது மனுஷர் தேவனை ஆராதிக்க ஏற்படுத்தப்பட்ட கட்டடத்தைப் பொதுவாகக் குறிக்கிறது. தேவன் ஒருபோதும் தனக்காக ஒரு கட்டடமாகிய ஆலயத்தைக் கட்டச் சொல்லி மனிதனிடம் கேட்கவில்லை. இஸ்ரயேல் ஜனம் தேவனை மதிக்கவும் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றவும், அநீதியை விட்டு நீதியான பாதையில் செல்லவும் தேவன் நியாயப்பிரமாணத்தை அவர்களுக்குக் கொடுத்தார். பாவம் எவ்வளவு கொடிது என்று அவர்கள் உணரும்படி பாவமறியா மிருக பலிகளை ஏற்படுத்தினார். அனைத்து மக்களும் பொதுவான ஒரு இடத்தில் தேவனுக்கென்று பலிகளைச் செலுத்தவும் பண்டிகைகளை அநுசரிக்கவும் ஒரு கூடாரத்தை அமைக்க மோசேயிடம் அளவுகளைக் கொடுத்தார். அதிலே மகாபரிசுத்தஸ்தலம் என்ற உட்புறத்தில் மன்னா உள்ள பொற்கிண்ணி, ஆரோனின் தளிர்த்த கோல் மற்றும் கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் அடங்கிய பொன்தகட்டால் மூடிய தேவனுடைய உடன் படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது.

இவைகள் முறையே தேவன் மனிதனை போஷிக்கிறார், தமக்கென இஸ்ரயேல் ஜனத்தைத் தெரிந்து கொண்டது, மற்றும் அவருடையக் கட்டளைகளின் அவசியத்தை மனிதன் உணர்ந்து கொள்ளும்படியாக ஏற்படுத்தப்பட்ட அதற்கடுத்த பரிசுத்த ஸ்தலத்தில் ஆறு ஆறாக அப்பங்கள் அடுக்கியமேஜை, குத்து விளக்கு போன்றது வைக்கப்பட்டிருந்தன. (நீதி 6:23) ன் படி வேதமே வெளிச்சம், கட்டளையே விளக்கு என்பதற்கு அடையாளமானவை பொன் தூபகலசம் - பரிசுத்தவான்களின் ஜெபத்திற்கு அடையாளமாக உள்ளது (வெளி 8:3). இந்தக் கூடாரத்தின் முற்பகுதியில் பலிபீடம் வைக்கப்பட்டு ஜனங்களுக்கான காளை, வெள்ளாட்டுக் கடா இவைகளின் பலி செலுத்தப்பட்டன. இந்த மொத்த அமைப்புமுள்ள கூடாரம் மக்கள் வனாந்திரத்தில் எங்கெல்லாம் சென்று தங்குகிறார்களோ, அங்கெல்லாம் கூட எடுத்துச் செல்லப்பட்டது. இதற்கான பணிகளுக்காகவே லேவியர்கள் கோத்திரம் ஒதுக்கப்பட்டு ஆசாரியர்களும் அவர்களில் இருந்தே நியமிக்கப்பட்டனர். ஜனங்கள் புறப்பட வேண்டிய சமயத்தையும், தங்க வேண்டிய இடத்தையும் கூடாரத்தின் மேல் மூடின மேகத்தை வைத்தே ஜனங்கள் தீர்மானித்தனர். கர்த்தருடைய மகிமை அந்த வாசஸ்தலத்தை நிரப்பிற்று என்று காண்கிறோம் (யாத். 40:34-38).

நம் தலைப்பு வார்த்தைகள் ஆகாய் 2:9 ன் படி முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று காண்கிறோம். இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்ட முந்தின ஆலயம் என்பது தாவீதின் மகன் சாலமோன் கட்டினதைக் குறிக்கிறது. இஸ்ரவேல் ஜனம் கானான் தேசத்தை சுதந்தரித்து பின் எருசலேம் தலைநகரமாகக் கொண்டு தாவீது அரசாண்ட போது, தான் மட்டும் மாளிகையில் இருக்கும்போது தேவனுடையப் பெட்டி கூடாரத்தில் இருப்பதா என்று சிந்தித்து தேவனுடைய பெட்டிக்காக ஒரு ஆலயம் கட்ட பிரயாசப்பட்டான். ஆனால், அவன் யுத்தத்தில் அதிக ரத்தம் சிந்தினவனாக இருந்ததால் தேவன் அவனுடைய மகன் சாலோமோனால் ஆலயம் கட்டவைத்தார் ( 1 நாளா. 22:8). தாவீது ஆலயத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தன் 39 ஆண்டுகால ஆட்சியில் ஆயத்தம் பண்ணிவைத்தான். அவனுக்குப் பின் ராஜாவாக வந்த சாலமோன் அந்த ஆலயத்தை 7 வருடங்களாகக் கட்டி முடித்தான் ( I ராஜா 6:38, யோவா/ 2:20 ) இப்படிப் பல பிரயாசங்களுக்குப் பின் கட்டி முடிக்கப்பட்ட அந்த ஆலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோது கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று– ஆசாரியர்கள் மேகத்தினிமித்தம் ஊழியம் செய்ய நிற்கக்கூடாமற்போயிற்று (Iராஜா. 8:11) என்று வாசிக்கின்றோம். இப்படிப்பட்ட ஆலயம் இஸ்ரவேல் ஜனம் கர்த்தரை விட்டு பின்வாங்கியபோது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் என்பவனால் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது (II ராஜா. 25:8,9).

சுமார் 70வருட சிறையிருப்புக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனம் மறுபடியும் அந்த ஆலயத்தைப் புதுப்பித்துக்கட்டும்படியான வாய்ப்பு அமைந்தது. அந்த சமயத்தில் ஆகாய் தீர்க்கதரிசிமூலம் சொன்ன வார்த்தை தான் முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமைப் பெரிதாய் இருக்கும் (ஆகாய் 2:9) என்ற வார்த்தையைக் காண்கிறோம். இந்த வசனத்திற்கு முன்பாக 7ம் வசனத்தில் சகல ஜாதிகளாலும் விரும்பப்படத்தக்கவர் வருவார். இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் என்று பார்க்கிறோம். அப்படி விரும்பப்பத்தக்கவர் நம் ஆண்டவர் இயேசுவே. இவரே பாதாளத்தின் வாசல் மேற்கொள்ளமுடியாத அவருடைய சபையைக் கட்டினார். இந்த சபையே இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் எனப்படுகிறது. அப்படி ரட்சிக்கப்பட்டு சபையில் இருந்த கொரிந்து மக்களைப் பார்த்துதான் பவுல் அப்போஸ்தலன், நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் (கொரி 3 : 16) என்று குறிப்பிடுகிறார். ஆகவே, தேவன் ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம் தீர்க்கதரிசனம் உரைத்த பிந்தின

ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்பது கிறிஸ்துவின் சபையையே குறிக்கிறது. கிறிஸ்துவின் சபை என்ற பெயர் இன்று உலகில் காணப்படும் நாமகரண கூட்டத்தாரால் பத்தோடே பதினொன்றாக எண்ணப்படுகிறது. ஆனால், வேதத்தை சரியாக ஒருவர் ஆராய்ந்து பார்த்தால் 2 சாமு 7 : 16 ல் சொல்லப்பட்ட என்றென்றும் நிலையான ராஜ்ஜியம் கிறிஸ்துவை ராஜாவாகக்கொண்ட கிறிஸ்துவின் சபையையே குறிக்கின்றது (கொலே 1 : 13 )அது மாத்திரமல்ல, அது எங்கு துவங்கும், பூமியிலுள்ள ஜனங்கள் எல்லாரும் அதற்குள் வருவார்கள் என்ற ஏசா 2 : 2,3 ன் தீர்க்கதரிசனத்தின்படியே சபையானது எருசலேமில் துவங்கியதாக அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் காண்கிறோம். எல்லாரும் என்பது புறஜாதிகளும் தேவனிடம் திரும்புவதைக் குறிக்கும்.

கிறிஸ்துவின் சபை எப்போது ஆரம்பிக்கும் என்று தானி 2: 44 ல் காண்கிறோம். அதில் குறிப்பிடப்படும் பொன், வெள்ளி, இரும்பு களிமண் போன்றவைகள் அடுத்தடுத்து வந்த உலக சாம்ராஜ்ஜியங்களைக் குறிக்கிறது. அதன்படி பார்க்கும்போது அழியாத ராஜ்ஜியம் எனப்பட்ட கிறிஸ்துவின் சபை ரோம ஆட்சியின் முடிவில் உருவானதாக நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். ரோம அரசாங்கமும் , யூதனுடைய ஆளுகையும் இரும்பும் களிமண்ணாக தானியேலில் வெளிப்படுத்தப்பட்டது. இயேசு என்னுடைய ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்கு உரியதில்லை என்று சொல்லியிருக்கிறார். எவ்வளவோ உலக அரசாங்கங்கள் கிறிஸ்துவினுடைய சபையை அழிக்க முயற்சித்தும் அதற்கு அழிவில்லாதபடி தேவன் காத்து வருகிறார். பூமிக்குரிய ஆலயத்தின் மகிமையைப் பேசி வந்த யூத ஜனங்களிடம் இயேசு மூன்றாம் நாளில் எழுந்ததும், பெந்தேகொஸ்தே நாளில் அவருடைய சபை கட்டப்பட்டதும் வேதவரலாறு ஆகும். இப்படி உருவான சபையைதான் நிருபத்தில் அது கிறிஸ்துவினுடைய சரீரம் என்றழைக்கப்படுகிறது (கொலே 1 : 18 ). இதுவே பிந்தின ஆலயமும் மகிமை நிறைந்ததுமாய் இருக்கிறது.

முந்தின ஆலயம் “ பஸ்காவை ஆசாரிக்கும்படி எருசலேமில் இருந்த ஆலயத்திற்கு வருடத்திற்கு ஒருமுறை ஜனங்கள் கூடிவந்தார்கள் (II நாளா 30 : 1). ஆனால் பிந்தின ஆலயமாகிய சபையில் நாம் வாரந்தோறும் பஸ்கா ( கொரி 5 : 7 ) எனப்படும் கிறிஸ்துவை நினைவுகூரும்படியாகக் கூடி வருகிறோம். நாம் கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத்தேடவும் கூடி வருகிறோம். முந்தின ஆலயத்தில் ஜனங்களுக்காக ஆசாரியனே

விண்ணப்பஞ் செய்தான். ஆனால் நாமே ஆசாரியர்களும் ராஜாக்களுமாக இருப்பதால் (Iபேதுரு2:9). தேவனிடம் நேரடியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும் சிலாக்கியம் பெற்றுள்ளோம். இந்த ஆசீர்வாதத்தைக்குறித்துதான் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று பார்த்தோம். முந்தின ஆலயத்தின் கற்களைப் பற்றி ஜனங்கள் பெருமை பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் பிந்தின ஆலயமாகிய சபையில் இரட்சிக்கப்பட்ட சபையாரே ஆவிக்கேற்ற மாளிகையாகவும் ஜீவனுள்ள கற்களாகவும் கட்டப்பட்டு வருகிறோம் (I பேதுரு 2 : 5). இதன் அஸ்திபாரம் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளாகவும் மூலைக்கல்லாக இயேசுவும் இருக்கிறார் ( எபேசி 2 : 20 ). ஆகவே தேவனுடைய வார்த்தையின்படி கிறிஸ்துவின் சபையே பிந்தின ஆலயமாக உள்ளது. அதன் மகிமைக்கு சுதந்தரராய் நாம் இருப்பதால் தேவனுக்கு நன்றியுள்ள பிள்ளைகளாய் இருப்போம். ஆமென்.

★

## நாளும் நடப்பும்

- தபால்தலை சேகரிப்பை ஊக்கப்படுத்த மாணவர்களுக்கு ஊக்கத் தொகை
  – மத்திய அரசு
- அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படும்.
  – அமைச்சர்
- ஒன்று முதல் பிளஸ்2 வரை புதிய வரைவுப் பாடத்திட்டம் தயார்.
  – தமிழக அரசு
- ஜி எஸ்டி வரி குறைப்பு : புதிய விலைப்பட்டியலை பொருட்களில் ஒட்ட டிசம்பர் வரை அவகாசம்.
  – மத்திய அரசு
- இத்தாலிய ஓவியர் டாவின்சி வரைந்த உலக ரட்சகர் என்ற யேசுநாதர் ஓவியம் 45 கோடி டாலருக்கு (சுமார் ரூ. 2,925 கோடி) விற்பனையாகி சாதனை
  – அமைச்சர்

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. E.A. Arumugam

**தே**வன் ஒருவரே அதாவது முப்பத்து முக்கோடித் தேவர்களுக்கு முன்பாக தேவன் ஒருவரே. பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் பரிசுத்த ஆவியாகிய தேவன் ஆகிய தெய்வீக நபர்களை உள்ளடக்கிய தேவன் ஒருவரே (1 யோவான் 5 : 7;அப் 7 :55-56). ஆனாலும் ஒவ்வொரு கூட்டமும் தங்கள் மனதில் தோன்றுபவை இந்த உபதேசத்தைப் புரட்டுகிறது என்று தெளிவடையாமல், போதிக்கவும் வாதிடவும் செய்கின்றனர்.

## திரித்துவக் கோட்பாட்டாளர்கள்

பிதாவாகிய தேவனே குமாரனாகிய கிறிஸ்துவாகவும் பின்பு பரிசுத்த ஆவியாகவும் வந்தார் என்பது இவர்களது கருத்து.

## தனித்துவக் கொள்கைக்காரர்கள்

திரித்துவப் போதனைகளைச் சாடும் தனித்துவக் கொள்கைப் போதனையாளர்கள் பிதாவாகிய தேவன் ஒருவர் மட்டுமே தேவன். அவர் தனித்துவமானவர். குமாரன் அவருக்குச் சமமானவரோ, சமகாலத்தவரோ அல்ல ஆராதிக்கப்படவேண்டியவருமல்ல, ஏனெனில், அவர் சிருஷ்டிக்கப் பட்டவர் என்கின்றனர்.

## யூதர்கள்

யெகோவா தேவன் ஒருவரே, கிறிஸ்து தேவனாகவோ, தேவனுடைய குமாரனாகவே இருக்க முடியாது. இயேசுவாகிய மேசியா இனி மேல் தான் வந்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து எருசலேமிலே ஆளுகை செய்வார் என்று சொல்லி மேசியாவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டுள்ளனர்.

## ரோமன் கத்தோலிக்கமும் புராட்டஸ்டண்ட் பிரிவு

இக்கூட்டத்தார்களும் மேற்குறித்த திரித்துவக் கோட்பாடுகளையும் யேகோவா சாட்சிகள் மற்றும் வேதமாணாக்கர் சபைகள் தனித்துவக் கொள்ளைகளைப் பற்றிக்கொண்டு இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர், பரிசுத்த ஆவி தேவனுடைய சக்தி என்றும் போதிக்கின்றனர். இவர்களுக்கு உடுக்கையடித்து ஊக்கமளிக்கும் வண்ணமாக தனித்துவக் கொள்கைக்காரர்கள் இதையே உறுதியளிக்கின்றனர்.

## இஸ்லாமியர்

அல்லா (இறைவன்) ஒருவனே, இயேசு, கிறிஸ்தவர்களால் புகுத்தப்பட்ட இடைச்செருகல். அவர் இறைவனின் மகனானால் இறைவனிள் மனைவி யார்? என்று கேட்கின்றனர். ஈசா நபி என்னும்

இயேசு 999 வது தீர்க்கதரிசி என்றும் அவர் மரியம் எனும் ஒரு பெண்ணிடம் பிறந்ததாகவும் அவர்களில் சிலர் ஏற்றுக்கொள்கின்றனர். ஈசா நபியே வருக என்று சொல்லி தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு அழுகிற கூட்டத்தாரும் அவர்களில் உண்டு. இப்படித் தாறுமாறுகளைப் போதிக்கும் இவர்கள் ஈசா (இயேசு) நபியைப் பற்றி எங்கிருந்து கற்றுக்கொண்டனர்? இவர்களின் குரானில் இடம் பெற்றிருந்த இன்ஜில் எனும் புத்தகம் எங்கே? இதைக் கேட்டால் கொலைவெறி கொண்டு ஆவேசப்படுவது ஏன். இவர்களும் தனித்துவக் கொள்கைக்காரர்களின் ஆதரவைப் பெற்றுள்ளனர்.

யேகோவா சாட்சி, வேத மாணாக்கர் சபை, இஸ்லாமியர், யூதர் ஆகிய இந்த நான்கு கூட்டத்தாருடன் தனித்துவக் கொள்கையாளர்கள் கைகோர்த்துக்கொண்டு தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்று அழைத்துக் கொள்வதுதான் வேடிக்கை. அவர்களைக் காட்டிலும் தனித்துவக் கொள்கையாளர்கள் தங்கள் துர்போதனைகளின் மூலம் கொடிய விஷத்தை மார்க்க உலகில் பரப்பிக்கொண்டுள்ளனர்.

## திருமறையில் முரண்பாடா?

நிச்சயமாக இல்லை. பிரச்சனை என்னவெனில், மேலே குறிப்பிடப்பட்ட இந்த மத நம்பிக்கையாளர்கள் எல்லாம் தங்கள் மனதில் தோன்றினவைகளையே தீர்மானித்துக்கொண்டு திருமறை உபதேசங்களை அவைகளுடனே பொருத்தமாக்க முற்படுவதால் அவர்கள் தெளிவடைய இயலவில்லை. முரண்பாடுகள் இவர்களிடமேயன்றி திருமறையில் இல்லை. தங்கள் மனதில் உள்ளவைகளைத் தூக்கியெறிந்து விட்டு, ஒரு புதிதாய்ப் பிறந்த குழந்தையைப்போல வேதவாக்கியங்களைக் கற்றால் மட்டுமே எதிலும் தெளிவுபெற இயலும். செய்வார்களா? (1பேதுரு 2 : 1-3).

## ஒன்றான மெய்த்தேவன் என்பதன் பின்னணி என்ன?

பல தெய்வ நம்பிக்கை பிதாக்கள் காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. அவர்களிடம் போய் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று தனித்தனியே போதித்தால் தங்களுடைய மூன்று பிரதான தேவர்களின் கண்ணோட்டத்தில் தேவத்துவத்தைப் பார்பார்கள். இதினாலே தங்கள் மூட நம்பிக்கையை வலுவாக்கி மெய்த்தேவத்துவத்தைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள். இதன் அடிப்படையில்தான் பிதா குமாரன் பரிசுத்த ஆவி சிவன் விஷ்ணு பிரம்மாவின் மறுபெயர்கள் என வாதிடுகின்றனர். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் என்று இயேசு ஜெபித்தார் (யோவான் 17 : 3).

இந்த வசனம் 1. ஒன்றான மெய்த்தேவன் என்று கூறும் கிறிஸ்து மூவரையும் உள்ளடக்கி ஒன்று ஆன மெய்த்தேவன் என்று குறிப்பிடுகின்றார். ஒப்பிடுக ஆதியாகமம் 3 :22; பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவனைப்போல் ஆனான் என்றார். இப்படியாக மூன்று நபர்த்துவத்தையுடைய தேவனை அறியவேண்டும். 2. அவர்

அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறியவேண்டும். பிதாவாகிய தேவனே கிறிஸ்துவாக வரவில்லை. பிதாவாகிய தேவன் அனுப்பி வைத்து வந்தவர்தான் இயேசு. இந்தக் கருத்து திரியேகத்துக்கு முரணானது. 3. இந்த ஒன்றான மெய்த்தேவன் விக்கிரகமல்ல; மெய்யான ஜீவனுள்ள தேவன் என்பதையும் கிறிஸ்து வலியுறுத்தினார்.

ஆக, பல தெய்வ நம்பிக்கையைக் கொண்டிருந்த, கொண்டுள்ள விக்கிரக வணக்கத்தார் முன் ஒன்றான மெய்த்தேவன் என்று திருமறை விளக்கப்படுத்துகிறது.

அடுத்ததாக, யேகோவா மட்டுமே தேவன் என்று நம்பியிருந்த யூதர்களுக்கு நன்றாக மெய்த்தேவன் எனும் கருத்து தேவன் தனித்தவரல்ல பிதா குமாரன் பரிசுத்த ஆவியை உள்ளாடக்கிய தேவத்துவம் என்பதை திருமறை வெளிப்படுத்துகிறது. தேவன் ஒருவரே எனும்போது தெய்வீகத் தன்மையுடைய மூன்று நர்களில் ஒருமித்த கருத்தையும் செயலையும் தெரிவிக்கிறது. இப்படிப் பன்மையைக் குறிக்கும் ஒருமைச் சொல் திருமறையில் சுமார் 2507 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் இவை ஒரு தனிப்பட்ட நபரைக் குறிப்பது போல்தான் காட்சியளிக்கும். தங்களிலுள்ள அறியாமையை விலக்கி நேர்மையாகக் கற்றலே இதற்கு ஒரே வழி.

**இப்புத்தகத்தின் நோக்கம்**

இச்சிறிய புத்தகம் எழுதப்பட்டதன் நோக்கம் திரியேகம் மற்றும் தனித்துவம் என்று பேசும் அறியாமை என்னும் இருளை திருமறையின் வெளிச்சம் காட்டி அகற்ற வேண்டும். எவ்விதத்திலாகிலும் இந்தப் போதகர்கள் சத்தியத்திற்குத் திரும்பவேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டது.

இந்தப் பணியில் திருமறை வசனங்கள் மட்டுமே பிரதானமாக ஆராய்ப்பட்டது. இதற்கு உதவியாக திருமறை எழுதப்பட்ட எபிரெய மற்றும் மூலபாஷைகளான கிரேக்க மொழி பொருள் விளக்க அகராதியிலிருந்து உறுதிசெய்யப்பட்ட உண்மை விளக்கங்கள் இவை. இதற்குப் பேருதவியாக இருந்த புத்தகம் ஸ்ட்ராங்ஸ் எக்ஸாஸ்டிவ் கன்கார்டன்ஸ் (strongs exaustive concordance) எனும் சொல் விளக்க ஒத்த வாக்கிய அகராதி. இப்புத்தகம் பலதரப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மூலபாஷைகளையும் ஆங்கிலத்தையும் நன்கு அறிந்த வல்லுநர் குழுவால் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் சுமார் 1500 பக்கங்களை A 4 பேப்பர் வடிவில் 1780 க்கு முன் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. கிறிஸ்த உலகில் அங்கீகாரம் பெற்றுள்ள இப்புத்தகம் எந்தவொரு தவறையோ முரண்பாட்டையோ கொண்டிருக்கவில்லை. தனிநபர்களோ, வேதவல்லுநர்களோ தவறவும் இருப்பதாக நிரூபிக்கவில்லை என்பது இதன் தனிச்சிறப்பு. மூலபாஷையின் வார்த்தைகளுக்கு அர்த்ததை விவரிப்பது மட்டுமே இப்புத்தகம் கொண்டுள்ளது. போதனை எதையும் செய்யவில்லை. மேலும், எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டை புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்த சுமார் 172 வேதவல்லுநர்களின் வெளியீடான செப்டிஜியுஜென் கருத்துக்களும் உதவியுள்ளன. ★